# ENGLISH MANUAL




## INTRODUCTION






# ஆங்கிலம் பயிலுதல் ஒரு முன்னோட்டம்



# LEARNING ENGLISH AN OUTLOOK

**நண்பர்களே!**

உங்களுடைய வாழ்க்கையில், பேசுவது என்பது மிக முக்கியமான விஷயம்.

உங்களுடைய வெற்றியையும், தோல்வியையும் தீர்மானிக்கக் கூடிய வளம் பேச்சுத் திறமைக்கு உண்டு.

உங்களை ஒரு மனிதராகவும், வளர்ச்சி அடைந்தவராகவும், சமுதாயத்தில் மேம்பட்டவராகவும் காண்பிப்பது பேச்சு திறமை. உங்களை சூழ்ந்துள்ள சுற்றுபுற சூழ்நிலை உங்களுக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ மாற்றக்கூடிய வல்லமை பேச்சுத் திறமைக்கு உள்ளது.

காலையில் நீங்கள் கூறும் GOOD MORNING என்ற வார்த்தையிலிருந்து இரவு தூங்குவதற்கு முன்னால் சொல்லும் GOOD NIGHT வரை நீங்கள் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் உங்களுக்கு பலதரப்பட்ட அனுபவங்களை அளிக்கக் கூடும்.

| | |
|---|---|
| Please come in | உள்ளே வரவும் |
| You can go now | நீங்கள் இப்போது போகலாம் |
| I will not come | நான் வரமாட்டேன் |
| Where did you go? | நீ எங்கே சென்றாய்? |
| When will you come? | நீ எப்பொழுது வருவாய் ? |
| Why didn't you come? | நீ ஏன் வரவில்லை? |
| Can you come tommorrow? | உன்னால் நாளை வரமுடியுமா? |
| When did you go? | நீ எப்போது சென்றாய்? |
| (come) (go) | (வா) (போ) |

மேற்கூறிய வாக்கியங்களில் "come", "go" என்ற இரண்டு வார்த்தைகளை மட்டும் ஒவ்வொரு நாளும் நூறு தடவைக்கும் மேல் நாம் பயன்படுத்துகிறோம்.

தாய் மொழியில் நீங்கள் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசுவதற்கு முடிகிறது. ஆனால் அதேசமயம், ஆங்கிலத்தில் அதே தன்னம்பிக்கையுடன் சரளமாகவும் பேசுவதற்கு உங்களுக்கு தயக்கமாக இருக்கலாம். ஆனால், கட்டாயமாக ஆங்கிலத்தில் மட்டுமே பேச வேண்டிய நிர்பந்தமும் இருக்கலாம். இதில் எப்படி வெற்றி கொள்வது?

உங்களைப் போன்றே பலபேர் தங்களது ஆங்கில பேச்சுத் திறமையை வளர்த்துக் கொள்ளாததால் வாழ்க்கையின் முன்னேற்ற பாதையில் வெவ்வேறு படிகளிலும் தேங்கி நின்று கொண்டிருக்கிறார்கள்.

How to speak with the Boss? - மேல் அதிகாரியுடன் எப்படி பேசுவது?

How to understand others? - மற்றவர்களை எப்படி புரிந்து கொள்வது?

## எப்படி ஆங்கிலத்தில் பேச்சு திறமையை வளர்த்து கொள்ளலாம்?

- பேசுவதற்கான விருப்பத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- பேசுவதற்கான சுமூகமான சூழ்நிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- உற்சாகமாகவும், உணர்வு பூர்வமாகவும் பேசுவதற்கு முயற்சிக்க வேண்டும்.
- முகபாவனை வெளிப்படுத்த தெரிந்திருக்க வேண்டும்.
- சம்பாஷனையை மாற்றி அமைத்துக் கொண்டு சூழ்நிலைக்கு ஏற்ப சரியான தகவல்களைக் கொடுக்க வேண்டும்.
- பேசுவதற்கு முன் சரியான விஷயத்தை, சரியான மனிதரிடம், சரியான நேரத்தில், சரியான இடத்தில் பேசுகிறோமா என யோசித்து பின் பேச வேண்டும்.
- மற்றவர்களைப் புரிந்துக் கொண்டு அவர்களது மனநிலைக்கு ஏற்ப பேச வேண்டும்.
- ஆணித்தரமாகவும், உறுதியாகவும் பேசும்பொழுது மென்மையான வார்த்தைகளை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- மற்றவர்களை தாழ்வுபடுத்தி பேசுவதை தவிர்க்க வேண்டும்.
- சாதாரணமாகப் பேசி கொண்டிருக்கும்பொழுது அது வாக்குவாதத்தில் முடியும் என்று தெரிந்தால் அதிலிருந்து விலகுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

உங்களது பேச்சுத் திறமைகளைத் தனிப்பட்ட முறையில் நீங்கள் வளர்த்துக்கொள்ள முடியாது. அத்தகு திறமையை வளர்த்து கொள்ள பழக்கப்படுத்தி கொள்ள வேண்டும்.

வீட்டில், நண்பர்களிடத்தில், வெளியிடங்களில், புதிய நபர்களிடம், பணியிடங்களில், சமுதாய கூட்டங்களிலும் தொடர்ந்து பேசிப் பழக வேண்டும். பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

## பொது மேடையில் பேசும் போது கவனிக்க வேண்டியவை :-

- நீங்கள் பேச வேண்டிய எல்லா விஷயங்களையும் வகைப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களா?
- நீங்கள் பேசும் தலைப்பில் எல்லா விஷயங்களும் ஆராயப்பட்டுள்ளனவா?
- பார்வையாளர்கள் மற்றும் பங்கேற்பவர்களுடைய பொருளாதார நிலை, சமூக அந்தஸ்து, கலாச்சாரம், வயது, பால், அனுபவம் இவை யாவும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா?
- குறித்த நேரத்தில் குறித்த விஷயத்தைப் பேசத் தயாராக இருக்கிறீர்களா?
- பேச வேண்டிய தலைப்புக்குச் சம்பந்தமான விஷயங்களை பேச இருக்கிறீர்களா?
- பேச்சினுடைய அமைப்பு தெளிவாகவும், தேவையான விஷயங்களைக் கொண்டுள்ளதாகவும் உள்ளதா?
- சரியான ஆரம்பமும், சரியான முடிவும் பேச்சினுடைய தொடக்கத்திலும், இறுதியிலும் காணப் பட்டிருக்கின்றனவா?
- பேச்சில் தகுந்த புள்ளி விவரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா?
- பேசும் இடமும், ஊருக்குத் தகுந்தார் போல் பழமொழிகளும், உதாரணங்களும் உள்ளனவா?
- பேச்சு, எழுத்து வகையில் உள்ளதா? பேசும் வகையில் உள்ளதா?

## சிறந்த பேச்சாளராகுவதற்கு தாரக மந்திரம் :–

- உற்சாகத்துடன் பேச வேண்டும்.
- எழுச்சியுடன் பேச வேண்டும்.
- உணர்வு பூர்வமாக பேச வேண்டும்.
- பேசப்படும் தலைப்பில் உயிரோட்டம் கலந்திருக்க வேண்டும்.
- கேட்பவர்களின் கவனத்தை கவர்ந்திழுக்க வேண்டும்.
- பேசும் பேச்சில் உண்மையும் விசுவாசமும் கலந்திருக்க வேண்டும்.
- தன்னுடைய நடை, உடை, பாவனை, ஆளுமை, அழகு, குரல்வளம் இவைகளை வெளிப்படுத்துவதற்காக மட்டும் பேச்சு அமையக் கூடாது.
- பேசுவதற்கு முன்பும், பேசியதற்கு பின்பும் அதே உற்சாகம் நிலவ வேண்டும்.
- பேச்சில் பொறுப்புணர்வு இருக்க வேண்டும்.
- நூறு பேரிடம் 5 நிமிடம் பேசும்பொழுது 500 மணிநேரம் பேசுவதற்கு ஒப்ப ஆணித்தரமாக பேசவேண்டும்.
- நேரம் ஆளுமையை சரிவர பயன்படுத்த வேண்டும். மற்ற பேச்சாளர்களுடைய நேரத்தை எடுக்கக் கூடாது.
- பேச வேண்டிய தலைப்பை கடுமையானதாகவோ, மென்மையானதாகவோ மாற்றக் கூடாது.
- நல்ல பேச்சாளர் தலைமை மனப்பான்மை உடையவராக இருப்பார், நேருக்கு நேர் பேசுவார். ஆணித்தரமாகவும், நட்புறவோடும், நேர்மையாகவும் பேசுவார்.
- தன்னம்பிக்கையுடன் பேச வேண்டும். அவநம்பிக்கையாகவோ அதிநம்பிக்கையுடனோ பேசக் கூடாது.
- மற்ற பேச்சாளர்களின் பேச்சைக் கவனிக்க வேண்டும்.
- உங்களுடைய சொந்த நடையில் இயற்க்கையாக உங்களிடம் பொருந்தி உள்ள அறிவையும் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டு பேச வேண்டும்.
- உங்களுடைய பலம் பலவீனத்தை உணர்ந்து சமப்படுத்தி, பலத்தைப் பெருக்கி பலவீனத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.



**English historian George Macauley was noted for his garrulity as much as for his wisdom. An acquaintance once remarked, “ he is certainly more agreeable since his return form india ….. now he has occasional flashes of silence that make his conversation perfectly delightful.”**

**Conversation should be fired in short bursts; anybody who talks steadily for more than a minute is in danger of boring somebody.**

**- Halan Miller.**

# CONTENT

Concept of Communication ........ 06
Process of Communication ........ 09
Principle of Communication ........ 12
Importance of Communication ........ 15
Types of Communication ........ 18
Channels of Communication ........ 24
Barriers tocommunication ........ 28
Effective Communication ........ 37
Barriers to Effective Listening ........ 41
Strategies for Improvedperception ........ 44
10 Tips to Improve Your Communication ........ 46
Handling Conflicts ........ 49
Pronunciation of Alphabets ........ 53
Grammar in a Glimpse ........ 67
Time Expression ........ 144
How to Punctuate? ........ 167
Words Commonly Misued ........ 173
Letter Writing Lapses ........ 190
One Word Substitution ........ 199
Homophones and Confusing Words ........ 210